EASTERN UNIVERSITY, SRI LANKA
11 OCT 2014

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## மூன்றாம் வருட/முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2011/2012 (செப்ரம்பர் 2014)

## GEOS 3103 புவியில் சிந்தனைகளும் முறையியலும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

யாதாயினும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

01. கிரேக்ககால புவியியல் ரீதியான சிந்தனைகள் ஏன் புவியியற் சிந்தனை வரலாற்றில் முதன்மைப்படுத்தப்படுகின்றது என்பதனைக்கூறி, இவர்களது சிந்தனைகள் எவ்வகையில் பிற்பட்ட கால புவியியற் சிந்தனையாளர்களுக்குப் பயனுள்ளதாய் அமைந்தது என்பதனை விளக்குக.
(25 புள்ளிகள்)

02. (அ) உரோமர் காலம் புவியியற் சிந்தனை வரலாற்றில் ஓர் இருண்டகாலமாக கொள்ளப்படுவதற்கான காரணங்களை சுருக்கமாக் விளக்குக.
(08 புள்ளிகள்)

(ஆ) உரோமர் காலத்தில் புவியியல் வளர்ச்சி நிலை எவ்வகையில் காணப்பட்டது என்பதனை விளக்கி, அவ்வாறானதொரு நிலை உருவாகியமைக்கான காரணிகளை நுணுகி ஆராய்க.
(17 புள்ளிகள்)

03. புவியியற் சிந்தனை வரலாற்றுக்காலத்தில் உருவாக்கப்பட்ட கலைக்கூடங்கள் இத்துறையின் வளர்ச்சிக்கு எவ்வகையில் பங்காற்றியுள்ளன என்பதனை யாதாயினும் இரண்டு இரு வேறுபட்ட காலங்களில் உருவான கலைக்கூடங்களை உதாரணமாகக் கொண்டு விளக்குக.
(25 புள்ளிகள்)

04. (அ) வகைப்பாடு எனும் பதத்தினை புவியியல் சார் உதாரணங்கள் தந்து வரைவிலக்கணப்படுத்துக.
(05 புள்ளிகள்)

(ஆ) புவியியலில் வகைப்பாட்டு செயல்முறையின் பிரதான நோக்கங்களை குறிப்பிடுக.
(05 புள்ளிகள்)

(இ) "பிரதேசமாக்கம் என்பது இன்றைய நவீன புவியியற் தோற்றப்பாடு ஒன்றாகும்." பிரதேச மயமாக்கத்தின் முக்கியத்துவத்தினை உதாரணங்கள் தந்து விளக்குக.
(15 புள்ளிகள்)

05.(அ) மாதிரிகள் என்பதனை வரைவிலக்கணப்படுத்தி மாதிரிகளின் வேறுபட்ட வடிவங்களையும் குறிப்பிடுக.

(08 புள்ளிகள்)

(ஆ) "மாதிரிகள் புவியியல் ஒழுங்கு நெறியின் வளர்ச்சிக்கு பெரும் பங்களிப்பு செய்துள்ள போதிலும் அவை பல எதிர்வாதங்களையும் சம்பாதித்துள்ளன." இக்கூற்றின் பெறுமானத்தை நுணுகி ஆராய்க.

(17 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றுள் யாதாயின் இரண்டினுக்கு விளக்கக் குறிப்புரை தருக.

(1) அரசின் ஸ்திரத் தன்மையில் மையநீக்க, மையநாட்ட சக்திகளின் தொழிற்பாடு.
(2) புவியியல் ஆய்வில் கருதுகோள்களின் முக்கியத்துவம்
(3) புவியியலின் சமகால வளர்ச்சியில் புவியியல் தகவல் முறைமையின் முக்கியத்துவம்.

(12½x2=25 புள்ளிகள்)